## 5 தேர்ச்சி: ஒன்று :- இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வர்.

# 1.5. விண்ணையும் மண்ணையும் ஒப்புரவாக்கும் ஆண்டவர்

பாடசாலைக் காலைக்கூட்டத்திலே தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டன. பதினோராம் தரம் வரையுள்ள அந்தப் பாடசாலையில் ஏழாந்தரம் முதல் மாணவத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில் ஏழாந்தரத்தைச் சேர்ந்த ராஜி என்ற மாணவியும் தெரிவு செய்யப்பட்டாள். இதைக் கேட்ட மாணவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு. ஏனெனில், ராஜி மிகவும் அமைதியான சுபாவம் உடையவள். கற்கைச் சூழல் எதுவுமற்ற வறிய குடும்பத்தில் வாழ்பவள். கற்றலில் மிகுந்த ஆர்வம் உடையவள். இறைபக்தி உடையவள்.

காலையில் கூறிய செய்தி கேட்டு அவள் அதிர்ச்சியடைந்தாள். அவளால் அதனை நம்ப முடியவில்லை.

* நான் மாணவத் தலைவியா?
* என்னால் இந்தப் பொறுப்பை எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

### பொறுப்பை ஏற்று இறை திட்டத்தை நிறைவேற்றிய மரியா



ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்சவேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.

(லூக். 1:26–31)

- திருவிவிலியத்திலிருந்து லூக்கா 1:26–38 பகுதியை வாசிக்கவும்.

மேற்குறிப்பிடப்பட்ட திருவிவிலியப் பகுதியை வாசித்து இறைவன் உமக்குத் தரும் செய்திகளை எழுதுக.

- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
- _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _




“நான் ஆண்டவரின் அடிமை”
-மரியாவின் பதில்-

வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்.

(யோவா. 1:14)

அருளும் உண்மையும் நிறைந்து மனுவுரு எடுத்து எம்மத்தியில் வாழ வந்த இறைவார்த்தையாகிய இயேசுவே உம்மை ஆராதிக்கின்றோம்.

மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளாகிய இறைமகன் கன்னி மரியாவின் உதரத்தில் மனிதனானார் என்பதே மனுவுரு எடுத்தல் எனும் மறைபொருளாகும்.

**இப்பாடலை மனதில் நிறுத்தித் தினமும் பாடுக:**

அருள்நிறை மரியே வாழ்க!
ஆண்டவர் உம்முடனே!
பெண்களுள் நீர்தான் புனிதவதி
உம் உதரத்தின் கனியும் இறைவனாமே!

மரியே மாதாவே!
பாவிகள் வேண்டுகிறோம்
எமக்காய் மன்றாடும்.

மரியா இறைவனின் விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்து அதனை நிறைவேற்ற எப்போதும் தயாராக இருந்தார். இறைமகன் இயேசுவைக் குறித்துக் கூறப்பட்ட வார்த்தைகளை எல்லாம் தனது உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார். தனக்கு ஏற்பட்ட சோதனைகள், வேதனைகள் யாவற்றையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார்.



மரியாவோடு சேர்ந்து தந்தை யோசேப்பும் இறைத்திட்டத்தின் பங்காளியாக செயற்பட்டார் என்பதை அறிகிறோம். தனது மனைவி மரியாவையும் குழந்தை இயேசுவையும் பாதுகாத்து வளர்ப்பதனூடாக இறைத்திட்டத்தை நிறைவேற்றினார்.

திருவிவிலியத்தில் பின்வரும் பகுதியை படிப்பதன் மூலம் புனித யோசேப்பு இறைத்திட்டத்தை நிறைவேற்றிய விதத்தை அறிந்துகொள்ளுங்கள்.

**மத். 1:18–25**

## என் வாழ்வில்...

- மரியாவைப்போல் இறைவனின் விருப்பத்தை எப்போதும் நிறைவேற்றுவேன்.
- பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் துன்பங்களைத் தாங்கிக்கொள்வேன்.
- தாழ்ச்சியுடன் பிறருக்கு எப்போதும் உதவுவேன்.
- திருவிவிலியத்தைத் தினமும் படித்து இறை, மனித உறவை வளர்ப்பேன்.

## செயற்திட்டம்:

1. இறைத்தூதர் கபிரியேல் மரியாவுக்குக் கொடுத்த செய்தி என்ன?
2. உமது வகுப்பில் உம்மிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களை எவ்வாறு நிறைவேற்றுவீர்?
3. உதவி தேவைப்படும் உமது நண்பன் / நண்பிக்கு எவ்வாறு உதவுவீர்?

### உமது அறிவிற்கு:

## மீட்பரைப் பற்றிய முன்னடையாளம்:

| | | |
|---|---|---|
| 1. ஈசாக் | : | ஆபிராம் ஈசாக்கைப் பலியிடுவதற்காக மலைக்கு எடுத்துச் செல்லல். |
| 2. யோசேப்பு | : | அவரது சகோதரர்கள் அவரை வியாபாரிகளுக்கு விற்றல். |
| 3. மோசே | : | இறைவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் உறவின் பாலமானார். மக்களுக்கு மீட்பைப் பெற்றுக்கொடுத்தார். |
| 4. வெண்கலப் பாம்பு | : | இதைப் பார்த்த மக்களுக்கு நோய்களினின்று விடுதலையும் மரணத்தினின்று மீட்பும் கிடைத்தது. |

### செயற்பாடு:

- மீட்பரைப் பற்றிய முன்னடையாளங்கள் கிறிஸ்துவின் வாழ்க்கையுடன் எவ்வாறு தொடர்புடையன என்பதைத் தருக.